208 —

சி. கருமாண்டகவுண்டன்புதூரில் பாலம் கட்டுதல்

***11433 — *திரு. நா. சா. பழனிசாமி* :**

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், சி. கோபாலபுரம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட சி. கருமாண்டகவுண்டன்புதூரில் புதிதாகப் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இல்லை.

முற்பகல் 10.30

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இல்லை என்று பதில் அளித்துள்ளார்கள். எனது தொகுதி மேற்குத் தொடர்ச்சி மலை பாலக்காட்டுக் கணவாய்க்கு அருகிலே இருக்கின்ற பகுதி என்பதால், மேடு பள்ளங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் கேரளாவை நோக்கிப் பல சிற்றோடைகள் செல்லுகின்றன. தென்மேற்குப் பருவ மழைக் காலத்திலே அந்த ஓடைகளில் அதிகமான தண்ணீர் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கும்போது, அந்தப் பள்ளங்களில் பாலம் இல்லாத காரணத்தால், இரண்டு கிராமங்களுக்கு இடையிலே போக்குவரத்துகூட பாதிக்கப்படக்கூடியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட பாலங்களில் ஒன்றுதான் சி. கருமாண்டகவுண்டன்புதூரில் அமைக்கப்பட வேண்டிய பாலம். அதைப்போல கொக்கனூருக்கும் கண்ணமநாயக்கன் பாளையத்திற்கும் இடையிலே ஒரு பாலம்; குப்பாண்டக்கவுண்டனூரில் கேரள எல்லையை ஒட்டியுள்ள அந்தப் பள்ளத்திலே ஒரு பாலம் ; சூலக்கல் ஆற்றிடையே ஒரு பாலம் — இப்படி 4, 5 பாலங்கள் என்னுடைய தொகுதியில் மிக முக்கியமாகக் கட்ட வேண்டி இருக்கிறது. அந்தப் பாலங்களை எல்லாம் அமைச்சரவர்கள் கட்டிக் கொடுப்பாரா ? அதற்கு இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், வரும் ஆண்டிலாவது அதற்காக தனியாக நிதி ஒதுக்கீடு செய்து, இந்தப் பாலங்களை முடித்துக் கொடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாலம் கட்டுகின்ற பணி எந்தவித அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலேயும் இடம் பெறவில்லை. பொதுவாக கிராமச் சாலைகள் திட்டப் பணிகளைப் பொறுத்தமட்டில் 10 லட்சத்திற்கு மேலுள்ள பால வேலைகளைச் செய்வதற்கு கிராமச் சேவைகள் திட்டத்திலே வழிவகை செய்யப்படவில்லை. இது ஊராட்சி ஒன்றியச் சாலை சேருமிடத்தில் அமைந்துள்ள ஒரு ஓடை. ஆகவே இதை நெடுஞ்சாலைத் துறையின் சார்பிலே கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாத காரணத்தாலேதான், பகுதி 2 திட்டத்தில் சேர்த்தால்தான் கட்ட முடியும். பகுதி 2 திட்டத்தைப் பொறுத்தவரையில் இதைவிட முன்னுரிமை பெற்ற இடங்களிலே பாலங்களைக் கட்டுகின்ற பணிகள் இருக்கிற காரணத்தால் அதில் இது இடம்பெறவில்லை. ஆகவே தற்போது செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்டுவதற்கு 40 இலட்சத்திற்கு மேல் மதிப்பீடு உள்ளது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இது ஒரு சிற்றோடையில் அமைந்துள்ள பாலம் என்பதால் அவ்வளவு பெரிய நிதி ஒதுக்கீடு செய்து, அதைக் கட்ட வேண்டிய அவசியமில்லை. முன்பெல்லாம் தரை மட்டப்பாலம் என்ற அடிப்படையிலே குழாய்களை அடியிலே பதித்து, பாலம் கட்டி வந்தார்கள். ஊராட்சி ஒன்றிய அளவிலே அந்தப் பாலங்கள் கட்டப்பட்டு வந்தன. ஆனால் ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் பாலங்களைக் கட்டுவதற்கு நிதி இல்லாத நிலையில், அதுவும் என்னுடைய தொகுதியில் உள்ள 2 ஊராட்சி ஒன்றியங்களும் சிறுசிறு வேலைகளைச் செய்வதற்குக்கூட பொது நிதி இல்லாத நிலையில், அந்தப் பாலங்களை ஊராட்சி ஒன்றியத்தின் சார்பிலே கட்ட முடியாது. எனவே அப்படிப்பட்ட தரை மட்டப் பாலமாக பொதுப் பணித் துறையின் மூலமாகவோ அல்லது நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகவோ கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 50 மீட்டர் அகலம், 5 மீட்டர் ஆழம் இருக்கிற காரணத்தாலே, இந்தப் பாலத்தைக் கட்டி, 200 மீட்டர் அணுகு சாலை — அப்ரோச் ரோட் — அமைக்க வேண்டியிருக்கிற காரணத்தாலே

—ஒரு வேலையை செய்து முடித்தால் அதைத் தெளிவாகச் செய்ய வேண்டும். அரைகுறையாகச் செய்யக்கூடாது என்றுதான் இப்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அங்கே பாலத்தைக் கட்டி அணுகு சாலை அமைத்தால்தான் போக்குவரத்துக்கு ஏதுவாக இருக்கும். ஆகவே அந்த அடிப்படையிலேதான் இதுபோன்ற மதிப்பீடு தயாரிக்கப் பட்டிருக்கிறது. அவர் சொன்னதுபோல் தரைப்பாலம் கட்டுவதற்கான வாய்ப்புகளை வேண்டுமானால் அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 209, திரு. ஆ. பாலையா, இருக்கையில் இல்லை.

வினா எண். 210, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

210 —

ஒசூரில் சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்

* **16974** *திரு. கே. ஏ. மனோகரன்* :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஓசூர் தொழிற்பேட்டை II-ல் அசோக் லேலண்ட் நிறுவனம் வர உள்ளதால், அங்கு சிட்கோ (SIDCO) தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை தொழிற்கூடங்கள் கட்டப்பட உள்ளன ?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 10.35

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் தொழில் துறையிலே 7-வது இடத்திலே இருந்ததை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சி பொறுப்புக்கு வந்த பின் இன்றைக்கு இந்தியாவிலேயே 3-வது இடத்திலே தொழில் துறையில் நமது மாநிலம் இருந்து வருகிறது. ஒசூரில் பல்வேறு பெரிய தொழிற்சாலைகள்